வெளிநாட்டிலிருந்து 125 கோடி ரூபாய் உணவுபொருள் இறக்கும

Regd: No. M 5458 Phone: No. 4502
விலை அரை அணு இலங்கை 5 சதம்

மாலை மணி

(திராவிடர் தமிழ் தினசரி கருத்திதழ்)

ஆசிரியர்: சி. என். அண்ணுதுரை எம். ஏ.,

மாலை 2 | சென்னை 4—12—50 | மணி 3

தந்தை வெளியில்-தனயன் சிறையில்

நாரணமங்கலம் வழக்கு

143, 188-வது பிரிவுப்படி குற்றப்பத்திரிகை தாக்கல்

திருச்சி, நாரணமங்கலம் கிராமத்தில் கழக கூட்டத்திற்கு 144-வது தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருந்ததை 27-11-50-ல் இயக்க வீரர்கள் 7 பேர் மீறி தடியடிபட்டு சிறை புகுந்தனர். இவர்களை பெரம்பலூர் சிறையில் வைத்திருந்தனர் ஆட்சியாளர். சிறை புகுந்த எழு பேரில் தோழர் ஆதிமூலம் ஒருவர். இவர் திராவிட முன்னேற்றக் கழக விளம்பர உறுப்பினர். இயக்கப் பற்றுடைய இளம் ...ர். இவரது தந்தையின் பெயர் இராமசாமி மூப்பனர். அமைதிக்கு பங்கம்-பொது மக்கள் நலன் பாதிக்கப்படுகிறது என்று நீலிக்கண்ணீர் சிந்தி இராமசாமி மூப்பனர் ஆட்சியாளரிடம் மண்டியிட்டு பெற்ருர். 144 தடையை—நமது இயக்க அறிவு வளர்ச்சி பிரசாரக் கூட்டத்திற்கு. தந்தையின் தன்மையைக் கண்ட தனயன் ஆதிமூலம் தயங்கினரில்லை. தடையை மீறினர். சிறை சென்று "நாரணமங்கலம்-தனது பழைய பெருமையை நிலை நாட்டிவிட்டது" என்ற பெருமையைப் பெற்ருர் தந்தை வெளியில்-தனயன் சிறையில்.

குற்றப்பத்திரிகை

1-12-50 நாரணமங்கலம் கிராமத்தில் 144 தடையுத்திரவை மீறிய தோழர் வானமாமலை முதலிய தோழர்கள் பெரம்பலூர் சிறையிலிருந்து அரியலூருக்கு பலத்த போலீஸ் பாதுகாப்பில் கொண்டுவரப்பட்டனர். இவர்கள் யாவரும் அவ்வூர் டிப்டி கலெக்டர் முன் ஆஜர் செய்யப்பட்டனர். யாவரும் உற்சாகமாகவே காணப்பட்டனர். பின்னர் இரண்டாவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட் அவர்கள், இவர்கள் யாவரும் இந்தியன் பீனல்கோர்ட் 143, ... ஆகிய இரு பிரிவின் கீழ் 144 தடைவுத்திரவை மீறிக் குற்றம் செய்திருப்பதாகக்கூறி, குற்றவாளிகள் ஏதாவது சொல்லிக் கொள்ள விரும்புகிறீர்களா என்று கேட்டார். நமது தோழர்கள் தாங்கள் குற்றவாளிகள் அல்லவென்று பதில் கூறினர். பின்னர் வழக்கை 6-12-50-க்கு தள்ளி வைத்திருப்பதாக மாஜிஸ்ட்ரேட் கூறியதும், தோழர்கள் யாவரையும் போலீஸ் பாதுகாப்போடு அரியலூர் சிறைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு கூடியிருந்த பொது மக்கள் "வாழ்க திராவிடம்" 'வீழ்க அடக்குமுறை ஆட்சி' என்று கோஷமிட்டு சிறை புகும் தோழர்களை உற்சாக மூட்டினர். இவ்வழக்கை கவனிக்க பெருவாரியான மக்கள் கோர்ட்டுக்கு வந்திருந்தனர். உள்ளூர்-வெளியூர் இயக்கத் தோழர்கள் கைதி செய்யப்பட்ட நமது தோழர்களை கண்டு உற்சாக மூட்டினர். (ந. நி.)

நான் என்ன எழுதினேன் "ஆரியமாயை"யில்! பார்ப்பனீயம் பேராசை கொண்டது என்று குறிப்பிட்டிருந்தேன். ஆனால் அதைவிட மோசமாக பாரதியார் கூறியிருக்கிருர்.

போராசைக் காரனடா -
பார்ப்பான்
பெரியதுரை வெற்றிலுடல்
வேர்ப்பான்!

இப்படி சொல்லியிருக்கிருர் தேசியக்கவி பாரதியார். அவருக்கு மண்டபம் கட்டுகிருர்கள்! என்னை சிறைக்கு அனுப்புகிருர்கள். நான் என்ன அதிகமாக எழுதிவிட்டேன்!

—சி. என். அண்ணுதுரை

உணவுபொருள் இறக்கும

வேளாண்மைநாடு வயிற்றுப் பசி எனத் தவிக்கும் கொடு

ஆளவந்தோர் ஆட்சிமுறையால் ஏற்பட்டுள்ள கொடுமைகள்

பஞ்சத்தை ஒழிக்க முன்வருவோர் விரட்டியடிக்கப்படும் பரிதாபநிலை

தேர்தல் தந்திரம்: மக்கள் கதி

நாட்டிலே, காங்கிரஸ்காரர்கள் ஆட்சி செய்த முறையினுல், பஞ்சம், வறுமை, பசி, பிணி, பூகம்பம், வெள்ளம், பயங்கரச் சாவுகள் என எடுத்துவைக்க முடியாக் கொடுமைகள் பல அன்றாட நிகழ்ச்சியாகி விட்டது.

நாட்டில் உணவுப் பொருள்களைப் பெருக்க முடியாமல் ஆ... தோறும் 125 கோடி ரூபாய் மதிப்புள்ள உணவுப்பொருள்களை வழைக்கும் நிலை ஏற்பட்டுவிட்டது.

வேளாண்மையைப் பெருக்க, அமெரிக்காவிடமிருந்து பெ... கடனுகிய பெருந்தொகை, திராவிடநாட்டில் எந்த அளவு எவ்வ... பயன்படுத்தப்பட்டதென்பது எவருக்கும் தெரியாத "வேத"ப் பொரு...ளாகி விட்டது.

போர் நின்று ஆறு ஆண்டுகளாக மக்கள் கால்வயிற்றுக் கஞ்... னிருந்து, புதிதாக வந்த தேச பக்தர்களுக்கு அவகாசம் அளி... பார்த்தனர் ஏதாவது நலன் கிடைக்காதா என்று.

தேச பக்தர்களோ, தங்களுக்கு நிர்வாகத் திறமை இல்லையென்... பதை நன்கு அறிந்துகொண்டும், பதவிப் போராசை காரணமாகத் தங்கள பதவிகள் பறிபோகாமல் இருக்க என்னென்ன செய்ய... டுமோ, அவற்றில் கண்ணுங் கருத்துமாயிருந்துகொண்டு, மக்... நன்மை குறித்துச் சற்றும் கவலைப்படாமல், ஆனல் சமயம் வாய்க்... போது, தாங்கள் எண்ணுவதெல்லாம், செய்வதெல்லாம் பொது ம... நலனைக் கருத்தில் கொண்டோமென்று வாய்ச்செல் வீரம் பேசி...கின்றனர்.

திராவிடநாட்டில் பசிப்பிணியை அகற்றும் வேலையைத் தாங்க... மேற்கொள்ளுவதாக, விருதுநகர் தோழர் வி. வி. இராமசாமி போன்... வர்கள் முன்வந்தும், உணவு உற்பத்தியைப் பெருக்க விஞ்ஞான முறை...யைக் கூற கோவை ஜி. டி. நாயுடு முன்வந்தும் தேச பக்தர்கள் இவை...களைக் காதில் போட்டுக்கொள்ளவும் நேரமில்லாமல் உழைக்கின்றன... ஓயாமல்-பொது மக்கள் நலன் நாடி.

பொது மக்கள் இன்னுமா நம்ப வேண்டும் இந்த தேச பக்தர்களின் பொதுநலத் தொண்டை.

நாட்டிலே பஞ்சத்தைப் போக்க, திராவிடத்திலே அரிசியில்லாக் குறையைப் போக்க, பர்மாவிலிருந்து அரிசி வரவழைக்கத் தனி வணிகருக்கு அனுமதி கொடுக்குமாறு, சென்னை அரசாங்கம், மத்திய அரசாங்கத்திடம் வேண்டிய போது, மத்திய அரசாங்க அமைச்சர் தோழர் முன்ஷி கண்டிப்பாக அதற்கிணங்க மறுத்துவிட்டார். பர்மாவில் தனி வணிகர்களுக்கு அரிசி கிடைப்பது கஷ்டமென்றும், அரசாங்கம் குறைந்த விலையில் வாங்கக் கூடுமென்றும் போட்டி வர்த்தகர்கள் இதில் தலையிட விட முடியாதென்றும் தோழர் முன்ஷி காரணம் கூறினர்.

ஆனல் அரசாங்கம் அரிசி வாங்க

இறங்கிப் பெருவாரியான பணச் செலவு நாட்டுக் கேற்படுத்துகிறது; மக்களுக்குப் போதுமான அரிசி கிடைப்பதில்லை; கிடைக்கும் அரிசியும் சில சமயங்களில் மக்கிப்போனதாக இருக்கிறது.

வணிகர்கள் இதில் தலையிடுவதென்ருல், இப்படியிருக்க முடி...யுமா விருதுநகர் வி. வி. இராமசாமி பர்மாவிலிருந்து தாம் அரிசி கொண்டுவந்து, அரசாங்கக் கட்டுப்பாட்டுக்கிணங்க, நல்ல முறையில் மக்களுக்குத் திருப்தியாக அரிசி விநியோகம் செய்யமுடியும் என்று கூறுகிருர். சிலநாட்களுக்கு முன்னர் செட்டிநாட்டரசர் தோ...

(4-ம் பக்கம் பார்க்க)

மாலை மணி

சென்னை 4—12—50 திங்கட்கிழமை

இன்னுமா ஏமாற்று வேலை?

கடந்த பொதுத் தேர்தல் காலத்திலே காங்கிரஸ்காரர்கள் புளுகிய புளுகுகள் அளவிட்டுரைக்க முடியாதவை, வெறும் புளுகுப் பிரசாத்தினுல் மக்களை ஏமாற்றியே காங்கிரஸ்காரர்கள் சென்ற தேர்தலில் வெற்றிபெற்றனர் என்பதை இன்று பொது மக்கள் நன்கு உணர்ந்து கொண்டிருக்கின்றனர்.

காலஞ்சென்ற சத்தியமூர்த்தி, தாம் பேசிய தேர்தல் கூட்டங்களில் ஒன்றுவிடாமல், காங்கிரஸ்காரர்களுக்கு ஓட்டளித்தால், பகீரதன் கங்கையைக்கொண்டு வந்ததைப் போல, பகிரதப் பிரயத்தனம் செய்து நாட்டைப் பொன்னுடாக்குவதாகக் கூறினுர்; மழை பெய்யாவிடினும் மழையைப் பெய்ய வைக்கத் தம்மிடம் மந்திர சக்தி இருக்கிறது என்று கூறினுர். அதே போன்ற பிற காங்கிரஸ் தலைவர்களும் நெடுங்காலமாகச் சொல்வதைக் கேட்டுக் கேட்டு நம்பி நம்பி ஏமாறுவதில் பழகியிருந்த மக்கள் காங்கிரஸ்காரர்களின் நடபடல் பேச்சுகளைக்கண்டு மயங்கினர்.

இன்றே மக்கள் நிலை வேறு, மந்திர சக்தியால் மாங்காயே விழுமென்றால் மழை எப்படிப் பொழியும என்பதை மக்கள் நன்கு அறிந்து கொண்டிருந்தனர். நாட்டிலே பலவிடங்களில் பலயாகங்கள் செய்யப்பட்டதையும் மந்திரிகள் ஓடியோடி அந்த யாகங்களை ஆதரித்துப் பேசியதையும் இலட்சக் கணக்கில் யாகங்களுக்காக பணம் செலவானதையும் மாதக் கணக்கில் மந்திரங்கள் கூறி யாகங்கள் நடைபெற்றதையும், இவ்வளவு மந்திரங்களைக் கேட்ட பின்னரும் மழை பொழியாமலே போய் மந்திரம் சொல்லாத வேறு நாட்டில் பெய்ததையும். மந்திரம் யாகம் இவற்றினைச் செய்த இந்நாட்டில் கொடிய பஞ்சமும் பயங்கரப் பிணிகளும் பூகம்பமும், மற்றும் பல கொடுமைகளும் அன்றுடம் நிகழ்ந்துவருவதையும் கண்ணாரக் கண்ட மக்கள், மந்திரம், யாகம் என்பவையனைத்தும் சொல் அழகுக்குப் பயன்படுத்தப்படும் வார்த்தைகள் என்பதையும்மக்களை ஏய்க்கப் பயன்படும் வார்த்தைகள் என்பதையும் இன்று நன்கு அறிந்து கொண்டனர்.

எனவே, பழைய காலப் புளுகுப் பிரசார முறையையே இன்றும் கையாள்ளாம் என்று காங்கிரஸ் தலைவர்கள் கருதினுல், சிந்தித்து முடிவு செய்யும் ஆற்றலைப் பெற்றுவிட்ட மக்கள் இன்னும் ஏமாந்துகொண்டே இருக்க மாட்டார்கள்.

ஆனுல் காங்கிரஸ் தலைவர்கள் நம் நாட்டு மக்கள் 100-க்கு 80 பேர் கல்வியறிவு பெருதவர்களாயிருப்பதால், எளிதில் எந்தப் புளுகையாவது புளுகி ஏமாற்றி மீண்டும் பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றுவிட வேண்டுமென்று அரும்பாடு பட்டுவருகின்றனர்.

இப்பொது, நாட்டிலே, காங்கிரஸ்காரர்கள் ஆட்சி ஒழுங்காக நடைபெறவில்லை யென்பதையும்; பொது மக்கள் நன்மையில் ஆட்சிப் பொறுப்பேற்ற காங்கிரஸ்காரர்கள் அக்கரை செலுத்தவில்லை யென்பதையும், சுய நலமும் ஊழல்களும் எங்கும் தாண்டவமாடத் தொடங்கிவிட்டனவென்றும், இலஞ்ச ஊழலும், கள்ளச் சந்தையும், பதுக்கல் வேலையும் நாடெங்கும் சர்வ சாதாரணமாகிவிட்டதென்பதையும், பொது மக்கள் நன்கு உணர்ந்துகொண்டிருக்கின்றனர்.

இங்கிலையில் பஞ்சமும் வறுமையும் பிணிகளும் வேறு தொல்லைப்படுத்துவது, நீதி நூல்களில் நல்லார் ஆட்சியில்லை யெனின் என்னென்ன சங்கடங்கள் ஏற்படும் என்று கூறியுள்ள செய்யுட்கள் பொது மக்களின் நினைவிற்கு வருகின்றன.

எனவே, பொது மக்கள் போக்கு இவ்வாருனது என்பதை நன்கறிந்து கொண்ட காங்கிரஸ்காரர்கள், பொதுத் தேர்தலை இன்னும் நடத்தாமல் காலங்கடத்தித் திரிகின்றனர். அரசியல் திட்டம் உருவாகி முடிந்தவுடனே பொதுத் தேர்தல் நடந்தாக வேண்டியது நியாயமாயிருக்க, தேச பக்தர்கள் ஆளும் நம் நாட்டிலே பொதுத் தேர்தல் பற்றிய பேச்சை இன்னும் காணும்.

பொதுத் தேர்தலைக் காலம் குறிப்பிடாமல் ஒத்திவைத்துக் கொண்டு, காங்கிரஸ்காரர்கள் இப்போது முதலே தேர்தல் பிரசாரத்தில் இறங்கிவிட்டனர். அமைச்சர் தோழர் பக்தவத்சலனுர் தென்காசியில் அண்மையில் பேசியபோது, 'காங்கிரஸ் நிர்வாகத்தைக் குறை கூறுவது நாட்டின் சக்தியைக் குறைப்பதேயாகும். காங்கிரசைக் குறை கூறுபவர்கள் சுய நலமிகாவேயவர். அரசாங்கம் தேர்தலில் ஒரு [illegible] எல்லாக் கட்சிகளும் முழு உரிமையுடன் கலந்துகொள்[illegible]ளிக்கப்படும்.''

என்று [illegible] திராவிட நாடு கோரும் கூச்சல் நாட்டின் [illegible]மானது என்றும் அக் கூச்சலை அடக்க வேண்டுமென்றும் கூறினுர். அதே போன்று தோழர் காமராஜா திராவிடர்கள் தனி நாடு கோருவது அபாயகரமானது என்கிருர், மொழிவாரி நாடு பிரிப்பது ஒற்றுமையைக் குலைக்கும என்கிருர்.

இந்தத் தோழர்கள் இவ்வாறெல்லாம் கூறித் திரிவதன் மூலம் மக்கள் நம்பிக்கையைப் பெற்றுவிடலாமென்றும் காங்கிரஸ் ஆட்சி செய்யும் தவறுகளை மறைத்துவிடலாமென்றும் எண்ணுகின்றனர்!

பொது மக்களின் பொருளாதார நிலையை அரசாங்கம் உயர்த்த முயல்வது உண்மையாயின், தொழிலாளர் வாழ்க்கை உரிமை கோரியபோது நீதி வழங்காமல், பலாத்கார அடக்கு உரிமையில் இறங்கியதேன்?

பதவியில் வெறியும் சுய நலமும் காங்கிரஸ்காரர்களுக்குஇல்லையென்ருல், அவர்களுக்குள்ளேயே பதவிக்காகப் பெரும் போராட்டமும் சண்டையும் சச்சரவும் ஊழல்களும் குற்றச்சாட்டுகளும் தலைதூக்கி நிற்பதேன்? அடிக்கடி மந்திரிசபை மாறுவதேன்?

நாட்டில் மக்கள் பஞ்சத்தால் பசியால் துன்புறுகின்றனரென்ருல், பசிப்பிணியைப் போக்க முயலாமல். உடைப் பஞ்சத்தைத் தீர்க்க முடியாமல், வட நாட்டு முதலாளிகளுக்கு ஆதரவு காட்டிக் கொண்டும், வட நாட்டு அகதிகளுக்கு இடமளித்துக் கொண்டும் வட நாட்டிடம் சரணுகதியடைந்து, நம் நாட்டு மக்களைப் பட்டினியால சாக விடுவதன் பெயர் இந்திய நாட்டு ஒற்றுமையா என்று கேட்கின்ருேம்.

நாட்டிலே செய்ய வேண்டிய பல நல்ல வேலைத் திட்டங்கள் இருக்க அவற்றைக் கவனிக்காமல், ஞாபகர்த்த ஸ்தூபிகள் எழுப்புவதிலும், இதுபோன்ற மற்றைய வேலைகளிலுய் பணத்தைப் பாழாக்கிக் கொண்டு இருப்பதன் பொருளென்ன வென்று கேட்கின்ருேம்.

ஓரங்குல நிலங்கூடத் தரிசாக இருத்தல் கூடாது; விளையும் நிலம் தரிசாகப் போடப்படுமாயின் அரசாங்கம் பறிமுதல் செய்யும் சட்டம் செய்யத் துணிந்ததே! சென்னை :அரசாங்கம் இவ்வாறு செய்ய வேண்டுமென்று தனக்கே தோன்ருவிடினும் நாம்பன்முறை இடித்திடித்துக் கூறி விடுகின்ருேமே எடுத்துக்கொண்டு செய்ததா? என்ன செய்தது? உணவைப் பெருக்குங்கள் என்று கூறி, காங்கிரசைத் தாங்கி நின்ற பத்திரிகைகளுக்கு ஏராளமான பணத்தை விளம்பரக் கட்டணம் என்ற பெயரால் கொடுத்துத் தாங்களைப்பற்றி நல்ல பிரசாரம் செய்யப் பயன் படுத்திக் கொண்டது.

இலஞ்ச ஊழல்கள் போக, அரசாங்கம் ஊழியர்கள், சட்டசபை மெம்பர்கள், மந்திரிகள் முதலியோர், பதவிக்கு வருமுன் தங்கள் பெயராலும் தங்கள் மனைவி மக்கள் பெயராலும் மற்றைய உறவினர்கள் பெயராலும் வைத்திருந்த சொத்துக்களைக் கணக்கில் பதியவைத்து, இரண்டாண்டுக்கொரு முறையேனும் அவர்கள் நிலையைப் பரிசோதித்து ஐயப்பாட்டிற்கிடமான நிலையிலிருப்பவர்களைக் கைது செய்வது என்ற திட்டம் இருக்க வேண்டுமென்று நாம் பண் முறை எடுத்துக் கூறினேம். வங்களாம் இந்த முறையைக் கையாண்டது. ஆனுல் சென்னையரசாங்கம் என்ன செய்தது.

எனவே, நாட்டுக்கோ, பொது மக்களுக்கோ, எல்லாவிதமான நன்மைகளையும் செய்ய ஏராளமான திட்டங்களையும் வண்டி வண்டியாக நல்லெண்ணமும்முடைய காங்கிரஸ் கட்சியின் ஆட்சி நாட்டை வறுமையிலும் பிணியிலும் பட்டினியிலும் சாவிலும் கொண்டுவந்துவிட்டது. இதை எடுத்துக் காட்டுபவர்களை அடக்கி விடுவதென்று காங்கிரஸ் தோழர்கள் கனவு கண்டு, கிளம்பி விட்டனர் பிரசாரத்துக்கு கடந்த தேர்தல்களைப்போல் வாய்க்கு வந்ததைப் பேசித் திரிகின்றனர் ஆனுல் இவர்கள் அடக்கிவைத்திருந்த அத்தனை கட்சிகளையும் இவர்களுடைய அடக்கு முறைச் செயல் நியாய மீறியது என்று நியாய மன்றம் தீர்ப்பளித்த காரணத்தால் வெளியே விடவேண்டி வந்து விட்டது.

இவர்களுடைய அடக்குமுறை எவ்வளவு நேர்மையான தென்பதற்கு இச் செயலே போதிய சான்ருகும்.

இப்படிப்பட்ட நிலையிலுள்ளவர்கள்தான் தாங்கள்மக்கள்முன்னே பழுதுபடாப் பத்தினிகள் போன்று உலாவ முன் வந்திருக்கின்றனர். ஆனுல், பொது மக்கள் இனிமேலும் இவர்களுடைய பொய் புளுகுகளிலும் பசப்பு வார்த்தைகளிலும் மயங்கிவிட [illegible] என்பது உறுதி.

★ யூனியன் ஆட்சியாளர் இழைக்கும் அநீதி ★

(o)

சென்னை ஆட்சியாளர் வேண்டுகோள் அசட்டை செய்யப்பட்டதாம்

யூனியன் பார்லிமெண்டில் மத்திய ஆட்சியை நெருக்கவேண்டுமென்கிறார் சென்னை முதலமைச்சர்

மத்திய ஆட்சியில் சென்னை ஆட்சிக்கிருக்கும் மதிப்பின் பரிதாப நிலை

சென்னை மகாணத்தில் கைத்தறி நெசவாளர் இலட்சக் கணக்கில் இருக்கின்றனர். இன்று அரசாங்கத்தின் தவறான போக்கால், இவர்கள் வாழ்வு மிக மிகச் சீர்கேடடைந்துவிட்டது.

இன்று தென்னாட்டில் இலட்சக் கணக்கான நெசவாளர்கள் நூல் கிடைக்காமல் வேலையற்றுப் பட்டினியால் வாடி வதங்குகின்றனர்.

தென்னாட்டு ஆலைகளில் உற்பத்தியாகும் நூல் வடநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. அதைத் தடுக்கச் சென்னை அரசாங்கத்துக்குச் சக்தியில்லை.

மத்திய அரசாங்கமோ சென்னைக்குத் தேவையான நூல் ஒதுக்கிக் கொடுக்க விரும்பவில்லை. சென்னை அரசாங்கம் யூனியன் மந்திரிகளிடம் விண்ணப்பித்துக்கொண்டும் அவர்கள் சென்னை அரசாங்கத்தைச் சட்டை செய்யவில்லை.

எனவே, யூனியன் பார்லிமெண்டில் உள்ள சென்னை அங்கத்தினர்கள், பார்லிமெண்ட் மூலம் யூனியன் அரசாங்கத்தை நெருக்கி வற்புறுத்தி வணங்க வைத்தாலொழிய இதற்கு ஒரு நல்ல பரிகாரம் ஏற்பட வழியில்லையென்று சென்னை முதலமைச்சர் நரசாப்பூரில் பேசுகையில், நன்கு எடுத்துக்காட்டியுள்ளார்.

வடநாடும், தென்னாடும் ஒரே ஒற்றுமையுடையவை என்றும், பிரித்துப் பேசுவது ஒற்றுமையைக் குலைக்கும் செயலென்றும் கூறித்திரியும் காமராஜர்களின் பொதுநலப் புத்தி இதற்குப் பதில் கூறுமா? தோழர் முதலமைச்சர் கூற்றுக்குக் காமராஜர்கள் என்ன கூறப்போகின்றனர்! வடநாடு தென்னாட்டைச் சுரண்ட விட்டு விட்டு, இங்குள்ளவர்கள் இளிச்சவாயர்களாகப் பட்டினி கிடந்து உயிர்விட்டால் காமராஜர்கள் மட்டும் உண்டு கொழுத்துத் திரிந்து வடநாடு தென்னாடு என்று பேசாதே எனக் கூறிக்கொண்டிருக்கலாம்! இதன் பெயர் தேசத் தொண்டா? பொதுநலமா? ஒற்றுமையா?

திராவிட நாட்டில் கைத்தறி நெசவாளர்கள் கஷ்டப்படாமல் வேலை செய்துகொண்டிருக்க வேண்டுமானால், ஒரு நாளும் வேலை செய்ய நூலில்லை என்று குறை கூறாமல் இருக்க வேண்டுமானால், மாதந்தோறும் 400 நாத்தல் நூல் கொண்ட மூட்டைகள் 36,000 வேண்டும். இந்த அளவு நூல்கள் மாதந்தோறும் சென்னைக்குக் கிடைப்பதாயின் மாதத்தில் 25 நாட்களுக்கு நெசவாளர்களுக்கு வேலையிருக்கும்

ஆனால் கடந்த மாதம் 12,000 மூட்டை நூல்களே திராவிட நாட்டிற்குக் கிடைத்தன. டிசம்பர் மாதத்திற்கு 10,000 மூட்டைகள் தான் கிடைக்குமென்று தெரிகிறது.

இத்தகைய குறைவுக்குக் காரணம் என்ன? ஏன் இவ்வாறு குறைந்து விடுகிறது? திராவிட நாட்டில் உற்பத்தியாகும் நூல்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதேயாகும். சென்னை அரசாங்கம், இங்கு உற்பத்தியாகும் நூல்களை வெளிநாடுகளுக்கு 4-ல் ஒரு பங்குத்தான் ஏற்றுமதி செய்யப்பட வேண்டுமென்று கட்டுப்பாடு விதித்தது. ஆனால், இங்குள்ள மில்கள் முன்னோர ஒப்பந்தங்கள் செய்து கொண்டிருக்கிறபடியால், இந்தக் கட்டுப்பாடு பயனற்றதாகிவிட்டது. எனவே, இங்கிருக்கும் நூல்களை வாங்கிக் கொண்டுபோய்த் துணிகளாக நெய்து, மிகுந்த விலையில் நம்மிடம் விற்றுப் பணம் சம்பாதிக்கும் வேலையை வடநாட்டு மில்கள் செய்துவருகின்றன. உடனடியாக இதைத் தடைசெய்யச் சென்னை அரசாங்கத்தால் முடியவில்லை.

சென்னையில் ஜனவரிமாதம் உற்பத்தியாகும் நூல்களை, அப்படியே ஏற்றுமதி செய்யாமல் நிறுத்துவதென்றால், அந்நூல் மார்ச் மாதந்தான் கடைத்தெருவுக்கு வரும் அப்படியே வந்தால்கூடச் சென்னை மாகாண நூல் பஞ்சம் வெளியுதவியின்றித் தீர்ந்துவிடாது. எனவே, வடநாட்டார் சென்னைக்கு நூல்களையனுப்பிவைக்கவேண்டும்.

இது சம்பந்தமாகச் சென்னைக்கு நூல் ஒதுக்கும் அளவை அதிகப்படுத்தவேண்டுமென்று சென்னை மந்திரிகள் யூனியன் அரசாங்கத்திடம் வேண்டியபோது, அவர்கள், இவ்வேண்டுகோளைக் கவனிக்கவேயில்லையென்று நரசாப்பூரில் பேசிய முதலமைச்சர் கூற்றிலிருந்து தெரிகிறது. யூனியன் அரசாங்கத்தை நெருக்கிக் கேட்டாலன்றி வழி பிறக்காது என்றும் அவர் கூறியுள்ளார்.

இதிலிருந்து தென்னாட்டின் நலத்தில் யூனியன் அரசாங்கப் எந்தவகை அக்கரையைக் கொண்டிருக்கிறதென்பது நன்கு விளங்குகிறதல்லவா? இதைத் திராவிட இயக்கத்தவர் கூறினால். அடக்குமுறைத் தாண்டவம்! இப்போது முதலமைச்சரே ஒப்பாரிவைக்கும் நிலை வந்துவிட்டதே வடநாட்டு ஆட்சியின் போக்கைப் பற்றி.

எனவேதான் திராவிடநாடு திராவிடருக்கென்றானால் அன்றி, திராவிடத் தனிநாடாகப் பிரிந்தாலன்றி திராவிட மக்கள் பசிபிணி, வறுமை, துன்பம் முதலியவைகளில்லாமல் வாழமுடியாது என்பதை இந்தத் தேச பக்தர்கள் ஆட்சியே மக்கள் மனத்தில் நன்கு ஆழப்பதியவைத்துக்கொண்டுவருகிறது. தங்கள் செயலே நாட்டு மக்களுக்கு உண்மை எதுவென்பதை நன்கு உணர்த்திவருவதையறியாத காங்கிரஸ்காரர்கள் திராவிடர்களுக்கு எதிர்ப்புக்காட்ட திராவிடர்களை வேட்டையாட ஆங்காங்குக் காங்கிரஸ் வேட்டை நாய்களை அவிழ்த்துவிட்டுவிட்டார்களாம். ஆனால் அவ்வேட்டை நாய்கள் திராவிட வேட்டைக்காரர்களிடம் வெற்றி காணமுடியுமா?

தி. மு. கழக பொதுக் கூட்டங்கள்

6—12—50

தேவபாண்டலம்
தோழர் ஈ. வே. கி. சம்பத்.

சென்னை கோகலேமண்டபம்
தோழர்கள் என். வி. நடராசன், மு. கருணாநிதி;

8—12—50

அய்யம்பேட்டை (காஞ்சிபுரம்)
தோழர்கள் சி. என். அண்ணாதுரை, அரங்கண்ணல், தில்லைவில்லாளன்.

10—12—50

தூத்துக்குடி
தோழர் ஈ. வே. கே. சம்பத்.

திருவாரூர்
தோழர்கள் மு. கருணாநிதி, கண்ணதாசன், அரங்கண்ணல், என். எஸ். இளங்கோ, ப. உ. சண்முகம், கே. ஆர். செல்லமுத்து.

மதுராந்தகம்
தோழர்கள் சி. என். அண்ணாதுரை, தில்லை வில்லாளன், திண்டிவனம் தங்கவேலு. சதுரை அழகரசு.

மேயர் பேசுகிறார்!

இவ்வாண்டு, சென்னை நகர சபையின் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பவர் ராஜா சர். முத்தையா செட்டியாரின் இளவல் இராமநாதன் செட்டியார் அவர்களாவர். இவர் பச்சையப்பன் கல்லூரிப் பொருளாதாரச் சங்கக் கூட்டத்தில் பேசுகையில், பொருளாதார வகையில் தென்னிந்தியர், இந்தியாவினின்று பிரிந்து தனித்திருக்க முடியாதென்றும், பிரதேசவாரியாகவோ, மொழிவாரியாகவோ பிரிப்பதென்பது கவைக்குதவாப் பேச்சென்றும் கூறியுள்ளார்.

இவர், தக்க காரணங்களுடன் ஆதாரபூர்வமாக இவ்வாறு மெய்ப்பித்திருந்தால் இவர் கூற்றுப் பொருந்தியிருக்கும். ஆனால், அப்படிச் செய்ய இவரால் முடியாதே. உலகத்திலே, பெல்ஜியம், ஸ்விட்ஸர்லாந்து, போர்ச்கல், ஸ்பெயின், அயர்லாந்து, ஹாலந்து, கிரீஸ் போன்ற இன்னும் பல சுண்டைக்காய் நாடுகள் முழு உரிமை பெற்ற தனியரசுகளாக வாழும்போது, தென்னிந்தியா தனித்து வாழ முடியாது என்று கூறும் ஒரு தென்னிந்தியரை என்னென்பது! மேலும் திராவிட நாட்டுப் பிரிவினைக்கு உழைத்த, தமிழரின் தனிப் பண்பாட்டைக் காக்கும் பணியில் கலந்துகொண்டு பணியாற்றிய ஒரு குடும்பத்தில் தோன்றிய தோழர் இராமநாதனுடைய போக்கு இவ்வாறு சென்றிருப்பது வியப்புக்குரியது. ஆனால், முதலாளித்துவம் குறுக்கிடும்போது, சரியானவை என்பதும் திரித்துக் கூறப்படும் நிலைமைக்கன்றோ போய் விடுகிறது. தோழர் இராமநாதன் அவர்கள் தம் பதவிக் காலத்தில் பெருமை அடைய வேண்டும் என்ற ஆசையில், இவ்வாறெல்லாம் ஏதையாவது சொல்லிக் கொண்டிரா[illegible] மக்கள் என்றும் நினைத்துப் பாராட்டும் வகையில் நகர முன்னேற்றத்துக்கான நற்செயல்களில் ஈடுபடவேண்டுமென்று விரும்புகிறோம்.

வேண்டுகோள்!

திராவிட முன்னேற்றக் கழக உட்கிளைகளை ஆங்காங்கு ஆரம்பித்தவுடன் அதன் நிர்வாகஸ்தர்களுடைய விவரங்களை உடனுக்குடன் ஒரு பிரதி "மாலை மணி" அலுவலகத்திற்கும் மற்றொரு பிரதி தலைமை அலுவலகம்; 202, தங்கசாலை வீதி, சென்னை-1. என்ற முகவரிக்கும் அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். "மானேஜர்"

தேவை

"மாலை மணி" விற்பனை செய்ய கீழ்கண்ட ஊர்களுக்கு முன்பணம் கட்டக்கூடிய ஏஜெண்டுகள் தேவை விவரங்களுக்கு எழுதவும்.

மதுரை
திருச்சி
கும்பகோணம்
மாயவரம்
வேலூர்
திருவண்ணாமலை

"மாலைமணி" பதிப்பகம்
மண்ணடி சென்னை—

வெளிநாட்டிலிருந்து...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முத்தையா செட்டியார் இவ்வாறே கூறியிருப்பதை மக்கள் மறந்து விடவில்லை. ஜனாப் அப்துல் ஹமீத் கானும் சட்டசபையில் இவ்வாறு ஒரு பரிகாரணத்தைக் கூறினார். ஆனால் பொதுநலம் நாமும் நம் அமைச்சர்கள் இவை ஒன்றுக்கேனும் செவிசாய்க்கவில்லை. ஏன்? இவர்களனைவரும் காங்கிரஸ்காரர்களல்லர்.

இவர்கள் விருப்பத்திற்கிணங்கி விட்டால், இவர்கள் மக்களின் பசிப்பிணியை விரட்டித் தங்களுக்குப் புகழையும் செல்வாக்கையும் தேடிக்கொண்டுவிடுவார்கள். ஆகவே இவர்களுக்கு இடங்கொடுத்தல் கூடாது என்று சென்னை மந்திரிகள் கருதினார்கள் போலும்!

ஆனால், காங்கிரஸ்காரர்கள் பர்மாவிலும், சியத்திலும், சீனாவிலும் நமக்காக அரிசி வாங்கப் பெருமுயற்சி எடுத்துக்கொண்டிருப்பதாக மக்களிடையே பிரசாரம் செய்கின்றனர்.

ஏழை நாடான சீனா, போரில் சிக்கிச் சீரழிந்த சீனா, இன்று நமக்கு அரிசி கொடுக்க முன்வந்திருப்பதாகத் தெரிகிறது. நேற்று வரை அரிசிக்கு இந்தியாவை எதிர்பார்த்துக்கொண்டிருந்த இலங்கை இன்று நமக்கு அரிசி கொடுக்கத் தயாராயிருப்பதாகத் தெரிவிக்கிறது.

> எவ்வளவு கொடுமைகளைச் செய்தாலுஞ்சரி இந்த ஆட்சியாளர்கள், அதை தாங்கிக் கொள்வது என்ற முடிவுக்கே வந்துள்ளோம். அதற்காகப் பயந்து எங்கள் பணியை விட்டு ஓடிவிடும் பரம்பரையைச் சேர்ந்தவர்களல்ல நாங்கள். எனவே, சர்க்காரின் அடக்குமுறைகளை எதிர்த்து அறப்போர் நடத்த, நமது கழகத்தவரை அனுமதித்துவிட்டேன்.
>
> —சி. என். அண்ணாதுரை

ஆற்றுவளத்திலும் நிலவளத்திலும் குன்றாத நம்நாடு, உணவு உற்பத்தியைப் பெருக்கக் கடந்த ஐந்தாண்டுகளாகத் தேசபக்தர்கள் ஆட[illegible] உழைத்துவரும் பாக்கியம் பெற்ற நம்நாடு, வேதசாஸ்திர மந்திரங்களால் பெருமையடைந்த நம்நாடு, நினைக்கமுடியாதவைகளையும் செய்துமுடிக்கவல்ல ஆற்றல் படைத்த யோகபோகங்களைக் கையில் வைத்திருக்கும் வைதீகர் நிறைந்த நம்நாடு, தெருவுக்குப் பத்து தேவர்களைப் பெற்றுள்ள நம்நாடு திராப் பஞ்சத்தால் தொல்லைப்பட்டுக்கொண்டிருக்கிறதென்றால் இக்கொடிய நிலைக்கு யார் காரணம்? உணவு உற்பத்திப் பெருக்கத்தொண்டின் இரகசியம்தான் என்ன?

மக்கள் 16 அவுன்ஸ் அரிசி பெற்று, பின் 12 அவுன்ஸ், பின் 8 அவுன்ஸ், பின் 6 அவுன்ஸாக இன்று பெற்று, இப்போது "பட்டினி கிடக்கப் பழகுங்கள் பாரத புத்திரரே" என்று பிரசாரம் செய்யும் நிலையில் தேச பக்தர்கள் இறங்கிவிட்டனர்.

நாட்டிலே, விளைவைப் பெருக்க, கோயமுத்தூர் விஞ்ஞானப் பேறிஞர் ஜி. டி. நாயுடு விஞ்ஞான முறையில் ஒரு வழி கூறினார். சாதாரணமாக ஒரு வயல் அளிக்கும் பயனைப் போல் பன்மடங்கு விளைவு அளிக்குமாறு பயிரிடும் முறையொன்றைக் கண்டுபிடித்து, அதை இந்திய விஞ்ஞானிகள் நேரிற் கண்டு புகழும் வண்ணம் தம் திறமையைச் செயலளவில் நிறைவேற்றிக் காட்டினார். உணவு உற்பத்தியைப் பெருக்க முயலும் ஆட்சியினர், பொதுமக்கள் நலனில் அக்கரை கொண்டு இராப்பகலாக ஓயாது உழைக்கும் தேசபக்தர்கள் அதைப் பற்றிச் சிறிதுகூடக் கவனித்திருப்பதாகத் தெரியவில்லை.

ரஷிய நாட்டிலே, மழையே வேண்டாத முறையில், நன்செய் நிலமே வேண்டாத முறையில் சத்து மிகுந்த அரிசியைப் பயிரிடும் முறையொன்றைக் கண்டுபிடித்துப் பயிரிட்டு வெற்றி கண்டதாகச் சில ஆண்டுகளுக்கு முன் செய்தி வந்தது. அதை விசாரித்து, மழையின்றிப் பஞ்சத்தில் அடிபட்ட நம் நாட்டில், அம்மழை வேண்டாப் பயிர் முறையைக் கற்று வந்து பயிராக்க முயற்சி எடுத்துக்கொள்ளப்படவில்லை. அது பற்றிக் கவனித்ததாகவும் தெரியவில்லை. அதற்குப் பதில் மழை வேண்டி யாகம் நடத்தும் வேலையைச் செய்வதில் நம்மவர்கள் முனைந்தார்கள்.

எனவே, உண்மையிலேயே இன்று நாட்டாட்சியில் இருப்பவர்கள் மக்கள் நன்மையைக் கருத்தில் கொள்ளாமல், நிர்வாகப் பொறுப்போ திறனோ இல்லாமல், தங்கள் மனம் போன போக்கில், கட்சிவெறியும், பதவிப் பித்தும்கொண்டு, வரப்போகும் தேர்தலில் தங்கள் நிலைமைக்குப் பங்கம் வராமல் காப்பாற்றிக் கொள்ள, கல்வியறிவில்லாத மக்களை எவ்வெவ்வழியில் தம் விருப்பம்போல் திருப்பிக்கொள்ளலாம் என்பதற்கான வழிகளில் இறங்கியிருக்கிறார்களே ஒழிய உண்மையில் இவர்கள் உருப்படியான வேலைகள் எதையும் செய்திருப்பதாகத் தெரியவில்லை.

மக்கள் ஏதேனும் கேட்டால், குடியரசு குழந்தைப் பருவத்தில் இருக்கிறதென்பதும், ஜமீன்தார் ஒழிப்பு, மதுவிலக்கு முதலியவற்றைக் காட்டுவதுமாக இருக்கின்றனர் இந்தக் காங்கிரஸ்காரர்கள். ஆனால் அவைகூடச் சரியானபடி நடைமுறையில் வேலைசெய்வதாகத் தெரியவில்லை. எனவே இவர்கள் போக்கு என்னவென்பதை எடுத்து எடுத்துக்காட்ட, வேறு விளக்கம் தேவையில்லை. பொதுமக்கள், நாட்டின் நிலையை, நன்கு கவனித்துச் சற்றுச் சிந்தித்துப் பார்த்தால், இன்று சட்டசபையிலும் ஆட்சிப் பீடத்திலும் அமர்ந்திருப்பவர்கள் தேர்தலுக்கு முன் பொதுமக்கள் முன்வந்து நின்ற நிலையையும் இன்று அவர்கள் இருக்கும் நிலையையும் சிந்தித்துப் பார்த்தால், இந்தத் தேசபக்தர்களுடைய பொதுநலம் எத்தகையதென்பது நன்கு விளங்கிவிடும். காமராஜர்களும் பக்தவத்சலங்களும் திராவிட இயக்கத்தார் மீது, காய்ந்துவிழுந்து அடக்குமுறைகளைக் கையாளுவதற்குக் காரணம் நன்கு விளக்கும் 144களும், துப்பாக்கிப் பிரயோகங்களும், தடியடிகளும், சிறைவாசங்களும் இன்னும் மற்றைய அடக்குமுறைகளும், திராவிட இயக்கத்தார் மீது சரமாரியாகப் பிரயோகம் செய்வதன் மர்மம் புரிந்துவிடும்.

திராவிட இயக்கத்தார், பொதுமக்களின் சொத்துக்களாகிய தண்டவாளங்களைப் பெயர்த்தார்களா? தபாலாபீஸ்களைக் கொளுத்தினார்களா?—இவற்றிற்காக அடக்குமுறையெனின் பொருளிருக்கிறது! ஆனால் இவற்றைச் செய்வது தியாகம்—தேச பக்தி.

நாட்டிலே வகுப்பு வேற்றுமையை உண்டாக்கும் சின்னங்கள் ஒழிய வேண்டும், உயர்ந்த சாதியென ஓரினம் இருக்கக் கூடாது, உயர் தாழ்வுகளைக் கற்பிக்கும் சாதனங்களை ஒழிக்க வேண்டும், திராவிட மக்களைப் பிற நாட்டு மக்கள் சுரண்ட இடமளிக்கக்கூடாது. நம்மைப் பட்டினி போட்டு வடநாட்டார் கொழுக்க இடமளிக்கக் கூடாது என்று கூறுவதற்காக, நம் மக்களை ஏமாற்றிப் பிற மக்களுக்குப் பலியிட முயலும் செயலை வெளிப்படுத்திக் காட்டுவதற்காக, சமத்துவத்தின் பேரால் உயர் சாதி இழிச் சாதி முறையை நாட்டில் வேரூன்றச் செய்து வரும் சதிச் செயலை விளக்கி மக்கள் மனத்தில் பதிய வைப்பதற்காக—திராவிடர் இயக்கத்தவர் மீது அடக்குமுறை வெடிகுண்டுகள்; திராவிடத் தலைவர்களுக்குச் சிறைவாசம், அபராதம், சொத்துப் பறிமுதல், பேசத் தடையுத்தரவு, எழுதினால் சிறை, நாடக மாடத் தடை, நூலெழுதினால் சிறை இதுதான் தேசபக்தர்கள் ஆட்சியில் பொது நலன் கருதிச் செய்யப்படும் வேலைகளாகும். பொது மக்கள் இதையறியாமலா இருக்கின்றனர்?

ஏஜெண்டுகளுக்கு!

"மாலைமணி" வெளியூர் ஏஜெண்டுகள் தங்களுக்கு வரும் தபால் பார்சல்களை தபாலாபீஸுக்குச் சென்று விண்டோ டிலவரி எடுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஜூலை மாதம் பட்டியல்படி பாக்கியுள்ள ஏஜெண்டுகள் தங்கள் பாக்கியை இம்மாதம் 10-ந் தேதிக்குள் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். அப்படி அனுப்பிவைக்காதவர்களுக்கு மேலும் பத்திரிகை அனுப்புவது கண்டிப்பாக நிறுத்தப்படும்.

"மானேஜர்"

வானொலி

(5—12—50—ஞாயிறு)

சென்னை

மீட்டர் 211·3

காலை

7-15 தமிழில் செய்தி
7-30 ஸ்ரீரங்கம் ஆர். கண்ணன் பாட்டு
8-0 ஆங்கிலத்தில் செய்தி
8-15 ஒலிபரப்பு முடிவு

பிற்பகல்

1-30 ஆங்கிலத்தில் செய்தி
1-50 சினிமா பாட்டுகள்
2-0 தமிழில் செய்தி
4-30 ஐரோப்பிய சங்கீதம்

மாலை

5-30 எம். எஸ். அனந்தராமன் பாட்டு
6-0 ஆங்கிலத்தில் செய்தி
6-20 வடக்கஞ்சேரி எஸ். எஸ். மணி பாகவதர் பாட்டு
7-0 குரல்வகை
7-15 தமிழில் செய்தி
7-45 திருச்சியில் உள்ளபடி
10-30 ஒலிபரப்பு முடிவு

திருச்சி

மீட்டர் 395·6

காலை

7-10 நீதாரம்பம்
7-15 தமிழில் செய்தி
7-30 காலை இசை
8-0 ஆங்கிலத்தில் செய்தி
8-15 குமாரி மணியன் பாட்டு
8-30 ஒலிபரப்பு முடிவு

பிற்பகல்

1-0 கதம்பம் (இசைதட்டு)
1-30 ஆங்கிலத்தில் செய்தி
1-50 பழனி விஜயலக்ஷ்மி பாட்டு
2-0 தமிழில் செய்தி

மாலை

5-30 புல்லாங்குழல்
5-40 இசைப்பயிற்சி
6-0 ஆங்கிலத்தில் செய்தி
6-15 குமாரி மணியன் பாட்டு
6-30 கிராம நிகழ்ச்சிகள்
7-15 தமிழில் செய்தி
7-30 சித்ரகானம்
7-45 கே. எஸ். வெங்கடராமய்யா பாட்டு
9-0 ஆங்கிலத்தில் செய்தி
9-30 நீங்கள் கேட்டவை
10-0 ஒலிபரப்பு முடிவு

சந்தா விவர

1. ஆண்டு ரூ. 12—8—0
6. திங்கள் ரூ. 7—0—0
3. திங்கள் ரூ. 3—8—0

தனிப்பிரதி அரையணா மூன்று மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

விளம்பர விகிதம்

அங்கலம் ஒன்றுக்கு ரூ. 5—0—0

நீடித்த விளம்பரங்களுக்கு சலுகையுண்டு விவரங்களுக்கு எழுதவும்.

"மாலைமணி" பதிப்பகம்
மண்ணடி-சென்னை-1

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty street, Madras-1